**ஜனவரி – 18**

# TNPSC துளிகள்

- முதல் தர கிரிக்கெட்டில் 40 வயதைக் கடந்த பிறகு இரண்டு இரட்டைச் சதங்களை அடித்த முதல் இந்திய மற்றும் முதல் ஆசிய மட்டை வீரராக ரஞ்சி கிரிக்கெட் வரலாற்றில் அதிக ரன்களைக் குவித்த நபரான வாசிம் ஜாபர் சாதனை படைத்திருக்கின்றார்.
- இந்திய குடியரசுத் தலைவர் சமீபத்தில் நீதிபதி லிங்கப்ப நாராயண சுவாமியை கர்நாடகா உயர்நீதிமன்றத்தின் இடைக்கால தலைமை நீதிபதியாக நியமித்திருக்கின்றார்.
- பாகிஸ்தான் குடியரசுத் தலைவர் ஆரிப் அல்வி பாகிஸ்தானின் 26-வது தலைமை நீதிபதியாக பதவியேற்ற நீதிபதி ஆசிப் சயீத் கோஷாவிற்குப் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.
    - இவர் தனது தீர்ப்புகளில் இலக்கியப் படைப்புகளைச் சுட்டிக் காட்டும் தனது பழக்கத்தால் கவிதை நீதிபதி என்று அறியப்படுகின்றார்.
- பணியாளர் மற்றும் பயிற்சித் துறையானது (The Department of Personnel & Training - DoPT) தேசிய மனித உரிமைகள் ஆணையத்தின் (NHRC - National Human Rights Commission) இயக்குநர் ஜெனரல் (விசாரணை) பதவியில் மூத்த ஐபிஎஸ் அதிகாரியான பிரபாத் சிங்கை நியமித்திருக்கின்றது.
- சத்தீஸ்கர் மாநில தேர்தல் ஆணையம் தனது தேர்தல் அதிகாரிகளை கண்காணிப்பதற்காக ஒரு செயலியை புதுதில்லியில் நடைபெற்ற பல்வேறு மாநிலங்களின் தலைமை தேர்தல் அதிகாரிகளின் மாநாட்டில் உருவாக்கியிருக்கின்றது. இந்த செயலி தேர்தல் சமயத்தின் போது பணியாளர் மேலாண்மையை சீர்படுத்திடச் செய்யும். இச்செயலியானது தேர்தலின்போது பணியாளர் மேலாண்மையை சீர்படுத்துகிறது.
    - இதனிடையே மத்தியப் பிரதேச மாநில தேர்தல் ஆணையம் மாற்றுத் திறனாளி நபர்களுக்கும் கர்ப்பிணிப் பெண்களுக்கும் வரிசையில் நிற்காமல் வாக்களிக்கும் அனுபவத்தை உறுதி செய்வதற்காக தனது தேர்தல் அலுவலகத்தால் மேம்படுத்தப்பட்ட ஒரு செயலியைக் காண்பித்தது.

# தேசியச் செய்திகள்

## 7-வது ஆசியான் – இந்தியா சுற்றுலாத் துறை அமைச்சர்கள் சந்திப்பு

- மத்திய சுற்றுலாத் துறை அமைச்சர் K.J. அல்போன்ஸ், வியட்நாமின் கலாச்சாரம், விளையாட்டு மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் நுகியேன் காக் தெய்ன் என்பவருடன் இணைந்து ஆசியான்-இந்தியா சுற்றுலாத் துறை அமைச்சர்கள் சந்திப்பிற்குத் தலைமை தாங்கியுள்ளார்.
- இந்த சந்திப்பு வியட்நாமில் உள்ள ஹா லாங் நகரத்தில் நடத்தப்பட்டது.
- இந்த சந்திப்பின் முடிவாக அமைச்சர்கள் ஆசியான் - இந்தியா சுற்றுலாத் துறை ஒத்துழைப்பு வருடம் 2019 என்பதனை வெளியிட்டனர்.

## இந்தியாவின் இரண்டாவது பாதுகாப்புத் துறையின் புத்தாக்க மையம்

- மத்திய பாதுகாப்புத் துறை இணையமைச்சர் சுபாஷ் பாம்ரே, தமிழ்நாட்டில் கோயம்புத்தூரை அடுத்து நாட்டின் இரண்டாவது பாதுகாப்புத் துறைப் புத்தாக்க மையத்திற்கான இடம் மகாராஷ்டிராவில் உள்ள நாசிக் ஆக இருக்கும் என்று அறிவித்தார்.
- இந்த அறிவிப்பு 2025-ம் ஆண்டிற்குள்ளாக நாட்டை உலகின் முன்னணி ஐந்து ஆயுத ஏற்றுமதியாளர்களில் ஒன்றாக உருவாக்கி விடுவது என்ற பாதுகாப்புத் துறை அமைச்சகத்தின் நோக்கத்துடன் பொருந்தியிருக்கின்றது.

# சர்வதேசச் செய்திகள்

## G77 குழுவின் தலைமைப் பதவியில் பாலஸ்தீனம்

- G77 குழுவின் தலைமைப் பதவியை எகிப்திய அரபுக் குடியரசிடமிருந்து பாலஸ்தீனம் கைப்பற்றி இருக்கின்றது.
- பாலஸ்தீனத்தை G77 குழுவின் தலைமைப் பதவியில் 2019 ஆம் ஆண்டில் தேர்ந்தெடுப்பது என்ற முடிவு அக்குழுவின் உறுப்பு நாடுகளின் வெளியுறவுத் துறை அமைச்சர்களால் 2018-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் எடுக்கப்பட்டது.
- 2018 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது பாலஸ்தீனத்தை கூடுதல் சலுகைகள் மற்றும் உரிமைகள் வைத்துக் கொள்ளச் செய்திடும் ஒரு தீர்மானத்தை அங்கீகரித்து உள்ளது.

> Privileges and Rights such as participating in international conferences held under its auspices, for the duration of its role as G77 Chair.

- பாலஸ்தீனம் ஐக்கிய நாடுகளின் உறுப்பு நாடு கிடையாது. ஆனால் அது வாடிகன் புனித நகரத்தைப் போன்று உறுப்பினரல்லாத பார்வையாளர் தகுதியைப் பெற்றிருக்கின்றது.
- G77 என்பதின் தலைமைப் பதவி (ஆப்பிக்கா, ஆசிய பசிபிக், லத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் ஆகியவற்றுக்கு இடையே) புவியியல் ரீதியான சுழற்சி முறையின் அடிப்படையில் அமைந்திருக்கின்றது. தேர்ந்தெடுக்கப்படும் நாடு இப்பதவியில் ஒரு வருடத்திற்கு நீடிக்கும்.
- G77 என்பது ஐக்கிய நாடுகள் சபையில் உள்ள (சீனா உள்பட) 134 வளரும் நாடுகளின் ஒரு கூட்டணியாகும்.
- ஐக்கிய நாடுகள் வர்த்தகம் மற்றும் வளர்ச்சியின் மீதான மாநாட்டில் (United Nations Conference on Trade and Development - UNCTAD) 1964 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15-ம் தேதி 77 நாடுகளின் கூட்டுத் தீர்மானம் மூலமாக G77 உருவாக்கப்பட்டது.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச்செய்திகள்

## 7 செயற்கைக் கோள்களோடு எபிசிலான் 4 என்ற ஏவுவாகனம் - ஜப்பான்

- சமீபத்தில் ஜப்பான் காகோஷிமாவில் உள்ள உசிநெளரா விண்வெளி மையத்தில் இருந்து 7 செயற்கைக் கோள்களுடன் எபிசிலான் – 4 என்ற ஏவுவாகனத்தை விண்ணில் செலுத்தியிருக்கின்றது.
- எபிசிலான் என்பது தொழிலாளர்கள் மற்றும் வெளியீட்டுச் செலவுகளைக் குறைக்கும் வகையில் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பத்தோடு பொருத்தப்பட்ட ஒரு திட எரிபொருள் ஏவு வாகனமாகும்.
- இது தரையிலிருந்து வெறும் இரண்டு சாதாரண கணினிகள் மூலம் கட்டுப்படுத்த கூடியது ஆகும்.


*குறிப்பு*

- 7 செயற்கைக் கோள்களில் ஒன்று போலியான விண்கற்கள் பொழிவை உருவாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டிருக்கின்றது.
- இது அடுத்த வருடம் கடலோர மாகாணமான ஹிரோஷிமா மாகாணத்தின் மீது உலகின் முதல் செயற்கையான விண்கற்கள் பொழிவை ஏற்படுத்திட எண்ணுகின்றது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## 2018 ஆம் ஆண்டில் இந்தியாவின் காலநிலை – IMD அறிக்கை

- இந்திய வானிலை ஆய்வு நிறுவனம் (Indian Meteorological Department - IMD) சமீபத்தில் "2018 ஆம் ஆண்டின் போது இந்தியாவின் காலநிலை" என்ற தலைப்பிலான ஒரு அறிக்கையை வெளியிட்டு இருக்கின்றது.
- இந்த அறிக்கையின்படி, இந்தியாவில் 2018 ஆம் ஆண்டானது 1901-ம் ஆண்டிலிருந்து 6வது வெப்பமான ஆண்டாகவும் உலகளவில் 4வது வெப்பமான ஆண்டாகவும் பதிவாகியுள்ளது.
- இந்த அறிக்கை 2018-ம் ஆண்டின் போது இந்தியா முழுவதும் சராசரி வெப்பம் குறிப்பிடத்தக்க இயல்பை விட அதிகமாக இருந்தது என்று குறிப்பிடுகின்றது.




- ❖ வருடாந்திர அளவில் சராசரியான தரைக் காற்றின் வெப்பம் இந்த ஆண்டில் (நாடு முழுவதும் சராசரியாக்கப்பட்டது) 1981-2010-ம் காலகட்டத்தின் சராசரியை விட 0.41°C அதிகம் ஆகும்.
- ❖ வருடாந்திர சராசரியான வெப்பம் 1901-ம் ஆண்டு முதல் 2018-ம் ஆண்டு வரை 100 வருடங்களுக்கு 0.6°C என்ற அளவில் அதிகரிக்கும் போக்கினை இது சுட்டிக் காட்டுகின்றது.
- ❖ இந்தியாவில் பதிவான அனைத்து ஆறு வெப்பமான ஆண்டுகளும் கடந்த 10 வருடங்களில் பதிவானவையே ஆகும்.
- ❖ 2018 ஆம் ஆண்டைப் பொறுத்த வரையில், இந்த ஆண்டின் குளிர் காலமானது 1901-ம் ஆண்டிலிருந்து ஐந்தாவது வெப்பமான பருவமாகும்.

## UNCCD-யின் 14-வது உறுப்பினர் மாநாடு

- ❖ சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தின்படி, இந்தியாவானது 2019 ஆம் ஆண்டில் பாலைவனமாதலைத் தடுப்பதற்கான ஐக்கிய நாடுகள் ஒப்பந்தத்தின் (United Nations Convention to combat Desertification - UNCCD) உறுப்பினர்கள் மாநாட்டின் (Confernece of Parties/ CoP) 14-வது பதிப்பை நடத்த இருக்கின்றது.
- ❖ இந்த மாநாடு நிலம் சீரழிதல் மற்றும் பாலைவனமாதல் ஆகிய விவகாரங்களைச் சரி செய்திட எண்ணுகின்றது.
- ❖ UNCCD CoP 14 ஆனது 2030-ம் ஆண்டிற்குள் நிலச் சீரழிவின் நடுநிலைமையை அடைந்திட இந்தியாவின் உறுதியினை எடுத்துக் காட்டிட எண்ணுகின்றது.

### நிலையான நீர்ப்பிடிப்பு வன மேலாண்மை

- திரிபுராவின் முதல்வர் பிப்லப் குமார் தேவ் சமீபத்தில் மேற்கு திரிபுராவில் உள்ள ஹாதிபாராவில் நிலையான நீர்ப்பிடிப்பு வன மேலாண்மைக்காக (Sustainable Catchment Forest Management - SCATFORM) ஒரு திட்டத்தை ஆரம்பித்திருக்கின்றார்.
- இது 1000 கோடி ரூபாய் மதிப்புடைய திரிபுராவின் மையப்படுத்திய நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் உள்ள வனப் பகுதிகளை மேம்படுத்துவதற்காக 10 ஆண்டுகால அளவில் மேற்கொள்ளப்படும் ஒரு திட்டமாகும்.
- இந்த திட்டத்திற்கு இந்திய அரசாலும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தாலும் (Japan International Cooperation Agency – JICA) இணைந்து நிதியளிக்கப்படுகின்றது.
    - 80 சதவிகிதம் – ஜப்பான் மற்றும் 20 சதவிகிதம் – மத்திய, மாநில அரசுகள் (இந்தியா).
- இத்திட்டத்தின் கீழ், திரிபுராவின் ஏழு மலைப்புற மாவட்டங்களில் மொத்தமாக 1447 தடுப்பணைகள் கட்டப்பட இருக்கின்றன.

## மாநிலச் செய்திகள்

### சூர்யா விருது - அரியானா

- அரியானாவின் முதல்வர் மனோகர் லால் கட்டார் சமூகத்தைப் பாதுகாப்பதிலும் சட்டம் ஒழுங்கைப் பேணிக் காப்பதிலும் தங்கள் இன்னுயிரை ஈத்த தியாகிகளான 71 மாநில காவல்படை வீரர்களின் பெயரால் மாணவர்களுக்கு "சூர்யா விருது" வழங்கிடுவதை அறிவித்து இருக்கின்றார்.
- ஒவ்வொரு வருடமும் 11000 ரூபாய் பரிசுத் தொகையானது தீரமான செயல்களுக்காக இந்த விருதின் கீழ் அமைந்திருக்கின்ற கிராமப்புற தொகுதியில் உள்ள பள்ளியின் மாணவர்களுக்கு வழங்கப்படும்.
- மேலும் அவர் காவல்துறை பணியாளர்களின் வீரதீரச் செயல்களைச் சுட்டிக் காட்டிடும் "Martyrs of Haryana Police" என்ற தலைப்பு கொண்ட ஒரு புத்தகத்தையும் வெளியிட்டார்.

## விளையாட்டுச் செய்திகள்

### அனைத்து வடிவங்களிலும் இருதரப்புப் போட்டிகளை வென்ற முதல் வெளிநாட்டு அணி - இந்தியா

- மெல்போர்ன் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்ற மூன்றாவது சர்வதேச ஒருநாள் போட்டியில் இந்தியா ஆஸ்திரேலியாவை வீழ்த்தி 2-1 என்ற கணக்கில் சர்வதேச ஒருநாள் போட்டித் தொடரைக் கைப்பற்றியது.
- இதன் மூலம் ஆஸ்திரேலிய மண்ணில் ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக 3 விதமான போட்டிகளிலும் அனைத்து இருதரப்புப் போட்டிகளையும் வெற்றி கண்ட முதல் வெளிநாட்டு அணியாக இந்தியா உருவெடுத்திருக்கின்றது.

- விராட் கோலியால் தலைமை தாங்கப்பட்ட இந்திய அணியே ஆஸ்திரேலியாவில் சர்வதேச இருதரப்பு ஒருநாள் போட்டித் தொடரை வெற்றி கண்ட முதலாவது இந்திய அணியாகவும் உருவெடுத்திருக்கின்றது.
- யுவேந்திர சாஹல் ஆட்டநாயகன் விருதும் புகழ்பெற்ற வீரர் M.S. தோனி தொடர் நாயகன் விருதும் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர்.

- - - - - - - - - - - - - - -